# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில்,

## மதுரை.

"அழைத்து அபயம் தரும் திருத்தலம்"

tnhrce.org



# வைகாசி பெருந்திருவிழா அழைப்பிதழ்

**20.05.2018 முதல் 02.06.2018**

ஸ்ரீ

ஸ்ரீவ்யூக சுந்தர்ராஜ பரப்ரம்மனே நம: அருள்மிகு மதுரவல்லி தாயார் சமேத கூடலழகர் பெருமாள் திருவடிகளே சரணம்



# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில்,

## மதுரை.

" அழைத்து அபயம் தரும் திருத்தலம் "



## வைகாசி பெருந்திருவிழா அழைப்பிதழ்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண் தோள் மணிவண்ணா! உன் சேவடி செவ்வித் திருக்காப்பு
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே !

- திருப்பல்லாண்டு

பேரன்புடையீர் வணக்கம்,

தமிழ்த் திருநாட்டின் நெடுகிய வரலாற்றில் வீரமும், விவேகமும், வெற்றி நடம்பயின்ற மூதூர் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தகவுடைய பேரூர், அருந்திறன் வேந்தர் பல்லோர் அரசாண்டு அரசியல் தெளிந்த அருங்கூடம் இவ்வண்ணமாகப் பல திறத்தாலும் பெரும் புகழ் பெற்றுக் கூடல் என்றும் ஆலவாய் என்றும் சிறப்புடன் பேசப்படும் மதுரை மாநகரில் வேந்தன் முன் எழுந்த மெய்பொருள் வாதத்தில் நாராயணனே பரம்பொருள் என்று வாதிட்டு நிலை நாட்டி பொற்கிழி பெற்ற பெரியாழ்வார் மல்லாண்டதிண்தோள் மணிவண்ணனுக்குப் பல்லாண்டு பாடிய மதுரையம்பதியில் ஊழி முதல்வன் உலகளந்த பெருமாள் ஆழி துயில் கொண்ட அளவிலா விளையாட்டுடையான் திருக்கொண்டு பொன்மேனி கொண்டு, அருக்கன் அணி நிறங்கொண்டு செருக்கிளரும் பொன்னாழியும் புரிசங்கமும் கைகொண்டு இத்திருக்கோயிலில் **அருள்மிகு கூடலழகர் என்னும் திருப்பெயர் தாங்கி எழுந்தருளியுள்ளார்.**

இப்பெருமானுக்கு நிகழும் மங்களகரமான திருவள்ளுவராண்டு 2049 வைகாசி திங்கள் 6ஆம் நாள் 20.05.2018 முதல் வைகாசித் திங்கள் 19ஆம் நாள் 02.06.2018 முடிய வைகாசி பெருந்திருவிழா இனிது நடைபெற உள்ளது.

இவ்வைகாசிப் பெருவிழாவின் முக்கிய திருநாட்களாக 21.05.2018 வைகாசித் திங்கள் 7ஆம் நாள் திங்கள் கிழமை காலை 9.05 மணிக்கு மேல் 10.25 மணிக்குள் சப்தமி திதியும், ஆயில்ய நட்சத்திரத்தில் **கொடியேற்றமும்**, 24.05.2018 வைகாசித் திங்கள் 10ஆம் நாள் வியாழக்கிழமை **கெருடசேவையும்**, 29.05.2018 வைகாசித் திங்கள் 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை **காலை 6.30 மணியளவில் திருத்தேரோட்டமும்**, 31.05.2018 வைகாசித் திங்கள் 17ஆம் நாள் வியாழக்கிழமை **தசாவதாரமும்** வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற இத்திருத்தலத்தில் அல்லவை கடிந்து அறம் நிலைத்திட அருள் பாலித்து நிற்கும் கூடலழகரை வழிபட்டு எல்லா நலமும் வளமும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டுகிறோம்.

**செ. மாரிமுத்து**, பி.ஏ., பி.எல்.,
துணை ஆணையர் / தக்கார்

tnhrce.org

**நா. நடராஜன்**, பி.எஸ்.சி., பி.எல்.,
இணை ஆணையர்
உதவி ஆணையர் / செயல் அலுவலர் (கூ.பொ.)

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 6



இரவு 7.00 முதல் 8.30 மணிக்குள்

**விஷ்வக்சேனர் புறப்பாடு, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்பணம்**

நாள் : 20.05.2018 ஞாயிறு

உபயதாரர் :
திரு. K. ராமசந்திரன் கதிர்வேல் குடும்பத்தினர், மதுரை.

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 7

**1 ஆம் திருநாள்**

நாள் : 21.05.2018 திங்கள்

உபயதாரர் :
திரு. R. ரவிச்சந்திரன், B.Sc., B.L., B.DL., சென்னை.
திரு. K.P. சுப்ரமணியன் குப்பா வகையறா, மதுரை.

காலை : 9.05 முதல் 10.25 மணிக்குள் சப்தமி திதி ஆயில்ய நட்சத்திரத்தில்

**கொடியேற்றம்**

இரவு 7.00 மணிக்கு மேல் தேரோடும் வீதி **அன்ன வாகனம்**



tnhrce.org

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 8

**2ஆம் திருநாள்**



காலை : 11.00 மணிக்கு மேல்
63, மேல ஆவணி மூல வீதி, கிருஷ்ணம்மாள் கட்டளை மண்டபத்திற்கு எழுந்தருளல் **திருப்பல்லாக்கு**

இரவு 7.00 மணிக்கு மேல் தேரோடும் வீதி **சிம்ம வாகனம்**

நாள் : 22.05.2018 செவ்வாய்

உபயதாரர் :
கிருஷ்ணம்மாள் கட்டளை, மதுரை.

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 9

**3ஆம் திருநாள்**

நாள் : 23.05.2018 புதன்

உபயதாரர் :
திரு. B. சுரேஷ், மதுரை.

காலை 9.00 மணிக்கு மேல் தேரோடும் வீதி **திருப்பல்லாக்கு**

இரவு 7.00 மணிக்கு மேல் தேரோடும் வீதி **அனுமார் வாகனம்**



1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு – 2049 விளம்பி வருடம், வைகாசி – 10

## 4 ஆம் திருநாள்



காலை 11.00 மணிக்கு மேல்
வடக்கு மாசி வீதி, இராமாயணச்சாவடி
மண்பத்திற்கு எழுந்தருளல்

**திருப்பல்லாக்கு**

இரவு 8.00 மணிக்கு மேல்
வடக்கு மாசி வீதி, இராமாயணச்சாவடி
மண்பத்திலிருந்து புறப்பாடு

**கெருட வாகனம்**

நாள் : 24.05.2018 வியாழன்

உபயதாரர் :
திரு. A. ராமகிருஷ்ணன் வகையறா,
மதுரை.

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு – 2049 விளம்பி வருடம், வைகாசி – 11

## 5 ஆம் திருநாள்



காலை 11.00 மணிக்கு மேல்
நேதாஜி ரோடு, அருள்மிகு மங்கள ஆஞ்சநேயர்
கோயில் வியாசராயர் மண்பத்திற்கு எழுந்தருளல்

**திருப்பல்லாக்கு**

இரவு 7.00 மணிக்கு மேல்
நேதாஜி ரோடு, அருள்மிகு மங்கள ஆஞ்சநேயர் கோயில்
வியாசராயர் மண்பத்திலிருந்து புறப்பாடு

**சேஷ வாகனம்**

நாள் : 25.05.2018 வெள்ளி

உபயதாரர் :
திருக்கோயில் கட்டளைதாரர்

tnhrce.org

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு – 2049 விளம்பி வருடம், வைகாசி – 12

## 6ஆம் திருநாள்



காலை 11.00 மணிக்கு மேல்
பழங்காநத்தம் கோனார் மண்பத்திற்கு எழுந்தருளல் **திருப்பல்லாக்கு**

இரவு 7.00 மணிக்கு மேல்
பழங்காநத்தம் கோனார் மண்பத்திலிருந்து புறப்பாடு **யானை வாகனம்**

திருக்கோயிலுக்கு எழுந்தருளி
ஆண்டாள் சன்னதியில் **மாலை மாற்றுதல்**

நாள் : 26.05.2018 சனி

உபயதாரர் :
பழங்காநத்தம் கோனார் வகையறா,
மதுரை.

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு – 2049 விளம்பி வருடம், வைகாசி – 13

## 7ஆம் திருநாள்



காலை 11.00 மணிக்கு மேல்
ஸ்ரீ பெருமாள் உபய நாச்சியாருடன்
பாண்டிய வேளாளர் மஹா ஜன சமூக
மண்டபத்திற்கு எழுந்தருளல்

**தங்கச் சிவிகை**

இரவு 8.00 மணிக்கு மேல் சூர்ணோற்சவம்

**பூச்சப்பரம்**

நாள் : 27.05.2018 ஞாயிறு

உபயதாரர் :
பாண்டிய வேளாளர்
மஹா ஜன சமூகம், மதுரை.

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 14

## 8 ஆம் திருநாள்



காலை 9.00 மணிக்கு மேல்
தேரோடும் வீதி

**திருப்பல்லாக்கு**

இரவு 8.00 மணிக்கு மேல்
திருத்தேர் கடாட்சித்தல்

**குதிரை வாகனம்**

நாள் : 28.05.2018 திங்கள்

உபயதாரர் :
திரு. ப. ரவிசங்கர்,
டாக்டர். ப. ஸ்ரீதர், சென்னை.

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 15

## 9 ஆம் திருநாள்

நாள் :
29.05.2018 செவ்வாய்

உபயதாரர் :
திரு. த. சோணைக்
கொத்தனார்
வகையறா, மதுரை.

காலை 5.30 மணிக்கு மேல் பெருமாள் உபயநாச்சியாருடன் **ரதாரோகணம்**

காலை 6.30 மணிக்கு மேல் **திருத்தேர் வடம்பிடித்தல்**

மாலை 4.30 மணிக்கு மேல் கூடலழகர் சன்னதி தெரு,
த. சோணைக் கொத்தனார் வகையறா மண்டபத்தில் **அலங்கார திருமஞ்சனம்**

இரவு 8.30 மணிக்கு மேல் தங்கச்சிவிகையில்
திருக்கோயிலுக்கு எழுந்தருளல் இரவு (கொடியிறக்கம்) **துவஜா அவரோகணம்**



tnrhrce.org

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 16

## 10 ஆம் திருநாள்



காலை 9.00 மணிக்கு மேல்
ஸ்ரீ வேதாந்த தேசிகர் சன்னதிக்கு எழுந்தருளல் **திருப்பல்லாக்கு**

மாலை 4.00 மணிக்கு மேல் **அலங்கார திருமஞ்சனம்**

இரவு 7.00 மணிக்கு மேல் உபய நாச்சியாருடன்
**எடுப்புச்சப்பரம், சப்தாவரணம்,**
**திருத்தேர் தடம் பார்த்தல்**

நாள் : 30.05.2018 புதன்

உபயதாரர் :
வேதாந்த தேசிக பக்த சபை,
மதுரை.

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 17

## 11 ஆம் திருநாள்

நாள் : 31.05.2018 வியாழன்

உபயதாரர் :
திவான் இராமராயர்
மண்டப கட்டளை,
மதுரை.

காலை 8.00 மணிக்கு மேல்
மேலமாசி வீதி, வக்கீல் புதுத் தெரு வழியாக வைகையாற்றில் இறங்கி
திருக்கண்களில் எழுந்தருளி இராமராயர் மண்டபத்திற்கு எழுந்தருளல்

**குதிரை வாகனம்**

| | |
|---|---|
| மாலை 5.00 மணிக்கு மேல் | இரவு 7.00 மணிக்கு மேல் |
| **தீர்த்தவாரி** | **தசாவதாரம்** |



1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 18

## 12 ஆம் திருநாள்



காலை 8.00 மணிக்கு மேல் பனகல் ரோடு, மேம்பாலம், யானைக்கல் கீழமாசி வீதி, அம்மன் சன்னதி தெரு, கீழ ஆவணி, தெற்காவணி மூல வீதி வழியாக கன்னிகா பரமேஸ்வரி அம்மன் சத்திரத்தில் எழுந்தருளல்

**கெருட வாகனம்**

மாலை 4.00 மணிக்கு மேல்

**அலங்கார திருமஞ்சனம்**

இரவு 7.00 மணிக்கு மேல் திருக்கோயிலுக்குள் எழுந்தருளல்

**குதிரை வாகனம்**

நாள் : 01.06.2018 வெள்ளி

உபயதாரர் :
நிர்வாகி கன்னிகா பரமேஸ்வரி அம்மன் சத்திரம், மதுரை.

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 19

## 13 ஆம் திருநா

நாள் : 02.06.2018 சனி

உபயதாரர் :
திரு. N. ஜெகநாதன், மதுரை.

மாலை 7.31 மணிக்கு மேல்

**விடையாற்றி உற்சவம்**



tnhrce.org

1427 ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு - 2049 விளம்பி வருடம், வைகாசி - 20



காலை 8.00 மணிக்கு மேல்

**உற்சவ சாந்தி அலங்கார திருமஞ்சனம்**

காலை 10.00 முதல் 11.00 மணிக்குள் ஸ்ரீ பெருமாள் உபயநாச்சியாருடன்

**ஆஸ்தானம் எழுந்தருளல்**

நாள் : 03.06.2018 ஞாயிற

உபயதாரர் :
திரு. R. சந்திரசேகரன் - செல்வரான
குடும்பத்தினர், மதுரை.


நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

**உதவி ஆணையர் / செயல் அலுவலர்**

அருள்மிகு கூடலழகர் திருக்கோயில்,
மதுரை - 625 001.

தொலைபேசி : 0452 - 2338542
e-mail : koodalalagar@tnhrce.com

தொலைநகலி : 0452 - 2334015
website : www.koodalalagartemple.tnhrce.in